வேலை பார்த்தவர்களெல்லாம் குற்றவியல் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வருகின்ற ஆண்டுகளில் வழக்கறிஞர்கள் மட்டுமே இந்தப் பதவிகளுக்கு – குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது வழக்கறிஞர்கள் மட்டுமே இந்தப் பதவிகளுக்கு அமர்த்தப்படுகின்ற முடிவை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். 1965-இலிருந்து உயர்நீதிமன்றமும், உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை ஏற்ற காரணத்தால் அரசும் சேர்ந்து செய்த தவறின் காரணமாக அனுபவம் அற்றவர்கள் சட்டப் பயிற்சி அனுபவம் அற்றவர்கள் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அந்தக் குறையை இந்த அரசு தற்பொழுது பூர்த்தி செய்திருக்கிறது. ஆனால் முழுக்க முழுக்க வழக்கறிஞர்களிலேயிருந்தே எடுக்க வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வரவில்லை. காரணம், நீதித்துறையிலே பட்டத்தைப் பெற்று, அந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கின்றவர்கள் சட்ட இலாகாவில் பல ஆண்டுகளாக அனுபவம் பெற்றிருக்கின்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்ற முறையில் தான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கி

*வினா எண். 172—திரு ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள கோவாப்ரேட்டிவ் அர்பன் பாங்க் செயல்படாது பல ஆண்டுகளாக மூடிக்கிடப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) மூடிக்கிடப்பதின் காரணம் என்ன?

(இ) அரசு அதை திறக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு சி பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து நகைக்கடன் வழங்கப்பெற்ற காசுக்கடன் தொகையை உறுப்பினர்களுக்கு குறுகியகாலக் கடனாக வழங்கியதை அடுத்து திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கியில் தவணை கடந்த கடன் நிலுவை அதிகரித்ததுடன் மத்திய வங்கியிலிருந்து புதிய கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் வாய்ப்பினை இழந்து வங்கி செயல் இழந்ததுடன் உறுப்பினர்களின் நம்பிக்கையையும் இழந்துள்ளது.

(இ) இவ்வங்கியை புத்துயிரூட்ட எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் பயனளிக்கவில்லை. ஆகவே இவ்வங்கியின் செயல் முறையை முடிவுகட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1982 பிப்ரவரி 12] [திரு. ரா. உமாநாத்]

[முற்பகல் 9.50]

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியையே மூடக்கூடிய அளவுக்கு அங்கே இந்த மாதிரி குறிப்பிட்டிருக்கக்கூடிய ஊழல்கள், சட்ட விரோதமான காரியங்கள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அதற்குப் பிரதான காரணம் யார்? அரசாங்கம் அதுபற்றி விசாரணை நடத்தினார்களா? அப்படியானால் அதற்குக் காரண மானவர்கள் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு ஊழல் நடக்கவில்லை, ஆனால், அந்த வங்கி அங்கத்தினர்களுக்குக் கடன் தருகிறது. வாங்கிய கடனை அங்கத்தினர்கள் குறித்த காலத்தில் திருப்பிக் கட்டுவதில்லை. எனவே, that has lost i's lencidg viability அதற்கு அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களேதான் காரணம்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மீண்டும் அதைத் திரும்ப ஃபங்க்ஷன் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துப் பயன் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எடுக்கப்பெற்ற நடவடிக் கைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களிடம் நிலுவையில் நிற்கும் கடன் தொகையில் மாதம் ரூ. 6,000 வீதம் 10 மாதங்கள் வசூலிக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. மூன்று மாத காலத்திற்குள் வைப்புத் தொகையை ரூ. 20,000 வரை வசூலிப்பது என முடிவெடுக்கப்பட்டது. கூட்டுறவு மைய வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கிகளை 10 மாதத்திற் குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது. உறுப் பினர்களிடமிருந்து வசூலிக்கும் கடன்கள் மற்றும் வைப்புத் தொகைகளிலிருந்து நகைக் கடன்கள் வழங்கி உறுப்பினர்கள் மற்றும் ஏனையோர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டு மென்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை அனைத்துமே இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாத அளவுக்கு உறுப்பினர்களுடைய ஆதரவு இல்லாமல் இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்னை அங்கே எழுகின்றது.

கூட்டுறவு நிறுவனங்களின் பொது நல்நிதி.

* வினா எண். 173— திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவு. சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) கூட்டுறவு நிறுவனங்களின் பொதுநல நிதி (Common Good Fund) யை கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை விரிவாக்குவதற்கோ அல்லது மிகவும் அத்தியாவசியமான பொது நல பணிகளுக்கோ பயன்படுத்தும் திட்டம் உண்டா?